செய்தி வெளியீடு எண் : 1372 நாள் : 12.07.2023

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களின் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது.**

புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று 12.07.2023 நடைபெற்றது.

இந்நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரையில் கனிம வருவாய் ரூ.354.28 கோடி ஈட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இனி வரும் மாதங்களில் இலக்கினை எய்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்கள். மேலும், கனிம வருவாய் விபரங்களை மாவட்ட வாரியாக கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிம வருவாயை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கை குறித்த அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தர அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்புடன் செயல்படவேண்டும் எனவும், மாவட்ட மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் முனைப்புடன் செயல்படவேண்டும் எனவும், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பகுதிகளை கள ஆய்வு மேற்கொண்டு, விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கினார்கள். மேலும், நிலுவையிலுள்ள வருவாய் இனங்களில் கவனம் மேற்கொண்டு நிலுவை தொகையினை விரைந்து வசூலிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் தகுதி வாய்ந்த கிரானைட் மற்றும் கல்குவாரிகளை துரிதமாக ஏலத்திற்கு கொண்டு வந்து கனிம வருவாயினை அதிகரிக்க அறிவுறுத்தினார்கள். வாகனம் கைப்பற்றுகையை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட அலுவலர்களும் குறைந்த பட்சம் மாதத்திற்கு 10 வாகனங்களை கைப்பற்றிடவும், அனுமதியின்றி செயல்படும் குவாரிகளை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், கனிம திருட்டினை முற்றிலும் தடுத்து மாநில அரசுக்கு அதிக அளவில் வருவாய் ஈட்டி தருமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வு கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்து துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை (முகூபொ) திரு.பணிந்திர ரெட்டி, இ.ஆ.ப., சிறப்பு செயலாளர் திருமதி பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் திரு. இல.நிர்மல் ராஜ், இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in